31-01-2024
O.S.No. 142/2018

வா. சா. 1 விஜயவனிதாஸ்ரீ அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன். வழக்கு விவரம் தெரியும். தாவாச்சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், நான்குமால் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது. தாவாச் சொத்துக்கள் 1962 ம் ஆண்டு கிருஷ்ணவேணியம்மாளும் அவரது சகோதரி சகுந்தலா அம்மாளும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாக பத்திரம் வாதசாஆ.1 ல் கிருஷ்ணவேணியம்மாளுக்கு எத்தனை அயிட்டச் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. ஆனால் சரிபாகமாக பிரித்துக்கொண்டார்கள். வாதசாஆ.1 ல் கிருஷ்ணவேணி-யம்மாளுக்கு 25 அயிட்டச்சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் எத்தனை அயிட்டச் சொத்துக்களுக்கு இத்தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 அயிட்டச் சொத்துக்களுக்கு தாக்கல் செய்து உள்ளேன். மற்ற அயிட்டச் சொத்துக்கள் என்ன ஆயிற்று, எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது தாயார் ரஜினிக்கு 1977 ல் திருமணம் ஆனது. என் தாயார் வேறு இனத்தவரை விரும்பி திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். என் தாயார் 4.08.1977 ல் வாதசாஆ.7 ன்படி அவரது தகப்பனார் மற்றும் தாயார் ஆகியோர்களுக்கு சொத்து சம்மந்தமாக பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாதசாஆ.7 ல் நானோ, எனக்கு பின்னர் எனது வாரிசுகளோ சொத்தில் உரிமை கோரமாட்டோம் என என் தாயார் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். என் தாயார் 2015 ல் இறந்தார். என் தாயார் 2015 வரை அவரது தாயாரிடம் சொத்தின் உரிமை கேட்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து சம்மந்தமாக 2005 ம் ஆண்டில் கிருஷ்ணவேணியம்மாளும்

அவரது மகன் மற்றும் மகள் ஆகியோர்கள் ஒரு பாகப்பத்திரம் வாதசாஆ.4 ஐ எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி அந்த பாகப்பிரிவினையில் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அடைந்து அவரது பெயரில் பட்டா பெற்று இன்றுவரை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். பட்டா எண்.376 2ம் பிரதிவாதி ரேணுகா பேரில் உள்ளது என்றால் சரிதான். அது பிவாசாஆ.1.(ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது). மேற்படி பட்டாவிற்கு உரிய சொத்துதான் தாவா பி செடியூல் சொத்து என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தை இன்றைய தேதிவரை பட்டா பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அதில் எனக்கு எந்தவித பாகமோ உரிமையோ இல்லை என்றால் சரியல்ல. சட்டகாலவரம்பிற்கு மேலாக 2ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவித்து வருவதை தடுப்பதற்கோ, உரிமை கோரவோ எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனவே 2ம் பிரதிவாதியைப் பொறுத்து வழக்கு தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

3,4 பிரதிவாதிகள் தரப்பு வழக்குரைஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

மறு விசாரணை -இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.01.31 18:58:34 +0530

Principal District Judge,
Dindigul.